1980 ஆகஸ்ட் 1] [பேரவைத் தலைவர்]

15. திரு. எல். இளையபெருமாள்

16. திரு. நா. சுந்தரராஜ்

17. திரு. ஏ. சந்திரசேகரன்

18. திரு. மு. அம்பிகாபதி

19. திரு. முகமது இஸ்மாயில்

20. திரு. கே. தனுக்கோடித்தேவர்

21. திரு. என். சங்கரய்யா

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று சட்ட முன்வடிவு ஆய்வுக் குழுவிற்கு அனுப்பப் பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் 131-வது விதியின் கீழ் மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் அவர்களை இக்குழுவின் தலைவராக நியமிக்கிறேன்.

(ஐ) நகர்ப்புற நிலம் (உச்சவரம்பு முறைப்படுத்துதல்) பற்றிய திருத்தச் சட்ட முன்வடிவு 1980.

மாண்புமிகு திரு எஸ். டி. சோமசுந்தரம் : தலைவரவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன். ''தமிழ்நாடு 1980 ஆம் ஆண்டு நகர்ப்புற நிலம் (உச்சவரம்பு முறைப்படுத்துதல்) பற்றிய திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 23/1980) கீழ்க்கண்ட 21 சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களைக் கொண்ட ஆய்வுக்குழுவிற்கு அனுப்பப் பெறவேண்டும்:—

1. திரு. த. இராமசாமி

2. திரு. மு. சிவபெருமாள்

3. திரு. வி. கருப்பசாமிப்பாண்டியன்

4. திரு. செ. பட்டாபிராமன்

5. திரு. பி. என். பரமசிவக்கவுண்டர்

6. திரு. ஆர். மணிமாறன்

7. திரு. சேலம் மு. ஆறுமுகம்

8. திரு. எஸ். அரங்கநாதன்

9. திரு. கே. ஆர். கணபதி

10. திரு த. மாரிமுத்து
11. மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்
12. திரு உ. சுப்பிரமணியன்
13. திரு ந. சிவஞானம்
14. திரு சி. பழனிமுத்து
15. திரு இரா. கருப்பையா
16. திரு கே. ஆர். சுந்தரம்
17. டாக்டர் கே. சௌரிராஜன்
18. திரு என். வி. என். சோமு
19. திரு கு. பா. பழனியப்பன்
20. திரு து. புருஷோத்தமன்
21. திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்

திரு என். சங்கரய்யா : பேரவைத் தலைவர் அவர்களே, நகர்ப்புற நிலஉடைமைக்கு வரம்பு கட்டுகிற சட்டத்திலே திருத்தத்தை கொண்டு வந்து பொறுக்கு குழுவிற்கு விடவேண்டும் என்று மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் அவர்கள் முன்மொழிந்திருக்கிறார்கள். அதை நான் ஆதரிக்கிறேன்.

ஒரு பிரச்னை என்னவென்றால் இப்பொழுது கொண்டு வரக் கூடிய திருத்தம் என்பது, ஒரு குறிப்பிட்ட அம்சத்திற்காக மட்டுமே கொண்டு வரப்பட்டிருக்கிறது. ஏற்கெனவே, 1976ஆம் ஆண்டு அந்தச் சட்டம் கொண்டுவரப்பட்டபோது, வரைபடங்களுக்கு சேங்ஷன் வழங்கவேண்டாம் என்று, அனுமதி வழங்கவேண்டாம் என்று தடுத்து நிறுத்தப்பட்டதினால் ஏற்பட்ட விஷயமாக இந்த திருத்தம் கொண்டுவரப்பட்டிருக்கிறது.

இதிலே கூட நகர்ப்புற நிலங்களை இவ்வாறு வரைபடங்கள் போட்டு தனிப்பட்ட பெரும் நபர்கள் மனைகளை விற்பதை பொருத்தவரை கூட, அவர்கள் ஏகபோகமாக எடுத்துக்கொண்ட ஏராளமான லாபம் சம்பாதிக்கிற முறையை தடுக்கிற வகையிலே சாதாரண மக்கள், நடுத்தர மக்கள் நியாயமான விலையில், இந்த மனைக்கட்டுகளை வாங்கக் கூடிய வகையிலே மாற்றி அமைக்க அரசாங்கம் இந்த சட்டத்தை பரிசீலிக்கும்போது, சேர்த்து பரிசீலிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்னொரு பிரச்சனையைப் பற்றியும் நகர்ப்புற நில உடைமைக்கு உச்ச வரம்பு கட்டும் இந்தச் சட்டத்திலே ஆய்வு செய்ய வேண்டும். இந்தச் சட்டத்தினால் என்ன பலன் ஏற்பட்டிருக்கிறது? சென்னை நகரத்திலே, மற்றும் நகர்ப்புறங்களிலே இந்தச்

சட்டத்தை அமுல் படுத்தியதினால் அரசாங்கம் எதிர்பார்த்த உபரி நிலங்கள் அரசாங்கத்தின் கைகளுக்கு வந்திருக்கிறதா? இந்தச் சட்டம் என்ன நோக்கத்திற்காக கொண்டு வரப்பட்டதோ அது நிறைவேற்றப் பெற்றதா என்று எல்லாம் யோசித்துப் பார்க்க வேண்டும்.

இல்லையென்றால், இந்தச் சட்டத்தின் கீழே இன்னும் அதிகமான நிலங்கள் அரசாங்கத்தின் கையிலே வரும் வகையில் இந்த நகர்ப்புற நில உச்சவரம்பு சட்டத்தில் திருத்தம் கொண்டு வரப்படவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். ஏராளமான அதிகப்படி நிலங்களை வைத்துக் கொண்டிருப்பவர்களிடமிருந்து அதை எடுப்பதற்கு அவசியம் ஏற்பாடு செய்ய வேண்டும். அப்படி நடவடிக்கைகளை தொடங்கும்போது, அவற்றில் விதிவிலக்கு என்ற பெயரால் பல விளக்குகள் கொடுக்கப் பெற்றிருக்கிறது. அந்த விதி விலக்குகளிலே தான் அப்படிப்பட்ட உபரி நிலங்கள், பெரும்பாலான உபரி நிலங்கள் அடக்கப்பட்டு விடுகின்றன. ஆகவே அதையும் அரசாங்கம் கவனத்தில் எடுத்துக் கொண்டு, அவைகளை பொறுக்குக் குழுவும் ஆய்வு செய்தால், ஏராளமான நல்ல பலன்கள் அதிகரிக்கும் என்று கூறி என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன்.

[முற்பகல் 11-10]

திரு சோ. அழகர்சாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கிற நகர்ப்புற நிலஉச்சவரம்பு திருத்த சட்ட முன்வடிவின் மீது மாண்புமிகு உறுப்பினர் திரு. சங்கரய்யா அவர்கள் கூறியதுமாதிரி இதிலே ஒரு அம்சம் மட்டும்தான் திருத்தமாகக் கொண்டுவரப்பட்டிருக்கிறது. நகரங்களில் குறைந்த வருமானம் உள்ளவர்கள், தொழிலாளர்கள் பலபேர்கள் இருக்கிறார்கள். இன்று கூட்டுறவு வீட்டுவசதி சங்கங்கள் பல இடங்களில் அமைக்கப்பட்டிருக்கின்றன. ஒருவருக்கு சொந்தமாக வீடு கட்டவேண்டும் என்றால் ரூ.40,000 வரை கடன் வழங்கப்படுகிறது. ஆனால் சாதாரண வருமானம் உள்ளவர்களுக்கு வீட்டுமனை கிடைப்பதில் மிகுந்த கஷ்டம் இருக்கிறது. காரணம் வசதி படைத்தவர்கள் அதிகப்படியான நிலங்களை, நகரத்தை ஒட்டியிருக்கிற நிலங்களை ஏக்கர் கணக்கில் வாங்கி வைத்துக்கொண்டு ஒரு கிரவுண்டுக்கு ரூ. 10,000, ரூ. 15,000 என்ற பெரிய கொள்ளை, அதிகப்படியான லாபம் சம்பாதிக்கும் விதத்தில் நடவடிக்கைகள் நடந்து கொண்டிருக்கின்றன.

ஏக்கர் ஒன்று பத்தாயிரம் ரூபாய்க்கு வாங்கி அதை மனைகளாகப் பிரித்து இரண்டு லட்சம் மூன்று லட்சம் ரூபாய்க்கு விற்கக்கூடிய ஒரு நிலை இன்று நாட்டிலிருக்கிறது. பலநகரங்களில் இப்படிப்பட்ட நிலைதான் இருக்கிறது. பெரிய நகரங்களில் நிலைமை இப்படித்தான் இருக்கிறது. குறிப்பாக சென்னையைப் பற்றிச் சொல்லவேண்டியதில்லை. இது சம்பந்தமாக ஒரு சட்டம்

[திரு. சோ. அழகர்சாமி] [1980 ஆகஸ்ட் 1

இருந்தது. அதில் விதிவிலக்கு என்று சொல்லி பல விதிவிலக்குகள் கொடுக்கப்பட்டன. அப்படி விதிவிலக்கு கொடுக்கப்பட்டதன் காரணமாக இப்போது மிச்ச நிலம் இல்லை என்ற நிலை ஏற்பட்டிருக்கிறது, ஏதோ நடவடிக்கை எடுப்பதாகச் சொன்னார்கள் சர்க்காரிலிருந்து, ஆனால் எந்தவித நடவடிக்கையும் எடுத்த தாகத் தெரியவில்லை.

குறைந்த வருமானம் உள்ளவர்கள், ஏழைகள் கூட்டுறவுச் சங்கங்களிடமிருந்து கடன்பெற்று ஒரு சிறிய வீடு கட்டவேண்டுமென்று நினைத்தால் வீடுகட்ட முதலில் இடம் கிடைக்கவேண்டும். ஒரு மூன்று சென்ட் அல்லது ஐந்து சென்ட் இடம் கிடைக்க வேண்டும் என்று சொன்னால் நிலம் கிடைப்பது கஷ்டமாகயிருக்கிறது, அந்த அளவிற்கு விலை அதிகமாக இருக்கிறது. ஆகவே, அதிகப்படியான நிலம் வைத்திருப்பவர்களுக்கு ஒரு உச்சவரம்பு வைத்து அந்த அளவிற்கு மேல் நகரத்தில் மனை வைத்திருப்பவர்களிடமிருந்து அரசாங்கம் நியாயமான விலை கொடுத்து அவற்றை எடுத்து ஏழை எளிய மக்களுக்கு, சாதாரண மக்களுக்கு நியாய விலையில் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதையும் சேர்த்து இந்தச் சட்டத்தோடு இணைத்து ஒரு சட்டமாகக் கொண்டுவந்தால் பிரயோஜனமாக இருக்கும்.

நில உச்சவரம்பு குறித்து பல சட்டங்கள் வந்துள்ளன. அந்த சட்டங்களில் உள்ள குறைகளை நீக்கி ஏழைகளுக்கு சாகுபடி செய்ய நிலம் கிடைக்கத்தக்க வகையில் சட்டம் வரப்போவதாகச் சொல்லப்படுகிறது.

(மாண்புமிகு பேரவை துணைத் தலைவர் தலைமை)

ரூ. 10,000 ரூ. 15,000 என்று விலை கொடுத்து மனை வாங்க சாதாரண மக்களால் இயலாது. பினாமி நிலங்களில் வீடுகள் கட்டிவைத்துக் கொண்டு குடியிருக்க வீடுகளை வாடகைக்கு விடுகிறார்கள். வசதி உள்ளவர்கள், இன்று ரூ. 200, ரூ. 300 என்று வாடகை கொடுத்து சோற்றுக்கு லாட்டரி அடிக்கும் நிலையில்தான் பலர் இருக்கிறார்கள். ஆகவே, இதை சமுதாயக் கண்ணோட்டத்தில் பார்க்கவேண்டும். பினாமியாக பலர் எழுதி வைத்திருப்பதாக எனக்கு தகவல் வந்திருக்கிறது. ஆகவே, அதிகப்படியான மனைகள் அல்லது நிலங்கள் வைத்திருப்பவர்களிடமிருந்து— பாக்டரிகள், கோழிப் பண்ணை இவையெல்லாம் வைத்திருந்தால் விதிவிலக்கு என்று இருக்கிறது; அந்த விதிவிலக்குகளை எல்லாம் நீக்கிவிட்டு மனை இல்லாதவர்கள் வீட்டு மனை கேட்டு மனு கொடுப்பவர்களுக்கு நியாயமான விலையில் வீட்டுமனை கிடைத்து வீடுகள் கட்டிக்கொள்ள ஏற்பாடு செய்யவேண்டும். ஆகவே, அதிகப்படியான நிலங்கள் வைத்திருப்பவர்களிடமிருந்து அவர்களுக்குஇரண்டு கிரவுண்டுகள் விட்டுவிட்டு மீதமுள்ளதை அரசாங்கமே எடுத்து, நியாய விலையில் எடுத்து மனை இல்லாதவர்களுக்கு நியாய விலையில் கொடுக்க நடவடிக்கைகள் எடுக்கும்விதத்தில் வேண்டிய திருத்தங்களை இதோடு சேர்த்துக்கொள்வது பிரயோசனமாகயிருக்கும் என்று கூறி முடித்துக்கொள்கிறேன்.

1980 ஆகஸ்ட் 1]

திரு எல். இளையபெருமாள் : இந்த மசோதாவின் மீது ஒரு முக்கியமான விஷயத்தை நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். நகரப் பகுதியோடு எல்லைப்புறப் பகுதிகளிலிருந்து பல இடங்களை புதிதாகச் சேர்த்திருக்கிறார்கள. இன்றைக்கு தமிழ்நாட்டில் இருக்கிற சட்டப்படி பின்தங்கிய மக்கள், மலைவாழ் மக்கள், ஆதி திராவிடர்கள் என்றிருக்கிற மக்களுக்கு நகர்ப்புற எல்லைக்கு அப்பால் உள்ளவர்களுக்கு குடியிருப்பு மனைகள் வழங்குவதில் பல்வேறு சலுகைகள் இருக்கின்றன. நகரங்களில் வாழ்கிற மக்களில் வீடற்ற ஏழை மக்கள் இருக்கிறார்கள். ஒரு பக்கத்தில் பின்தங்கிய மக்கள் இருக்கிறார்கள். ஒரு பக்கத்தில் அரிஜனங்கள் இருக்கிறார்கள்.

இப்படிப்பட்ட மக்களுக்கு இன்றைய நிலையில் அவர்களுக்கு உதவி செய்து, குடியிருக்க வீடுகள் வாங்கிக் கொடுப்பதற்கு நம்மிடம் வழியில்லை. குறிப்பாக, சென்னை நகரத்திலே வரத ராஜபுரம், கோவிந்தராஜபுரம், கல்யாணமேஸ்திரி தெரு, பெரிய மேடு ஆகிய ஏரியாக்களில் தங்களுக்கு நிலம் சொந்தமானது என்று தெரியாத சில இடங்கள் இருக்கின்றன. அப்படித்தெரிந்தவர்கள் சிலர் பம்பாய், கல்கத்தா போன்ற இடங்களில் இருக்கிறார்கள். ஆலயங்கள் பேராலும், தர்க்காக்கள் பேராலும் எழுதி வைத்திருக்கிறார்கள். 1908ஆம் ஆண்டு சட்டத் திருத்தத்திலே இப்படி நிலங்கள் வைத்துக் கொண்டிருக்கிறார்கள். எனவே, இப்படிப்பட்ட பகுதிகளையெல்லாம் தீர்க்க பரிசீலனை செய்து, அப்படி கேட்பாரற்று இருக்கும் பகுதிகளையும், அரசாங்கத்தின் நிலத்திலே இருந்துகொண்டு 8, 10 குடிசைகள் போட்டுக்கொண்டு அவைகளை வாடகைக்கு விட்டு வாழ்கின்ற நிலைமையும் இருக்கிறது, அதேபோல் அதிகாரத்தை துஷ்பிரயோகம் செய்யக்கூடிய நிலைமைகள் எல்லாம் இருக்கின்றன. எனவே, நான் குறிப்பிட்ட இந்தப் பகுதிகளையெல்லாம் கவனத்தில்கொண்டு, இந்த வரி விதிப்பு மட்டுமல்லாமல், வசதியற்ற, சொந்த குடிசைகள் அற்ற நிலையிலேவாழக்கூடிய மக்களுக்கும், எப்படிகிராமப் பகுதிகளிலே வாழ்கின்றவர்களுக்கு வசதிகள் செய்து கொடுக்கப்படுகின்றதோ. அதைப்போல் நகரத்திலே இப்படிப்பட்ட நிலையிலே உள்ளவர்களுக்கும் சலுகைகள் அளித்து, அத்தகைய ஏழை எளிய மக்கள் வாழ்வதற்கு வாய்ப்பும், வசதியும் செய்து கொடுக்க வேண்டும் என்று அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன். வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி:—தமிழ்நாடு 1980ஆம் ஆண்டு நகர்ப்புற நிலம் (உச்ச வரம்பு முறைப்படுத்துதல்) பற்றிய திருத்தச் சட்ட முன்வடிவு

[பேரவைத் துணைத் தலைவர்] [1980 ஆகஸ்ட் 1

(சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 23/1980) கீழ்க் கண்ட 21 சட்ட மன்றப் பேரவை உறுப்பினர்களைக் கொண்ட ஆய்வுக்குழுவிற்கு அனுப்பப்பெறவேண்டும்:—

1. திரு. த. இராமசாமி
2. திரு. மு. சிவபெருமாள்
3. திரு. வ். கருப்பசாமிப்பாண்டியன்
4. திரு. செ. பட்டாபிராமன்
5. திரு பி. என். பரமசிவக்கவுண்டர்
6. திரு. ஆர். மணிமாறன்
7. திரு. சேலம் மு. ஆறுமுகம்
8. திரு. எஸ். அரங்கநாதன்
9. திரு. கே. ஆர். கணபதி
10. திரு. த. மாரிமுத்து
11. மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்
12. திரு. உ. சுப்பிரமணியன்
13. திரு. ந. சிவஞானம்
14. திரு. சி. பழனிமுத்து
15. திரு. இரா. கருப்பையா
16. திரு. கே. ஆர். சுந்தரம்
17. டாக்டர் கே. சௌரிராஜன்
18. திரு. என். வி. என். சோமு
19. திரு. கு. பா. பழனியப்பன்
20. திரு. து. புருஷோத்தமன்
21. திரு. ஏ. எஸ். பொன்னம்மாள்

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறை வேற்றப்பெற்றது.

மாண்புமிகு பேரவைத்துணைத் தலைவர்: 131-வது விதியின்கீழ் மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் அவர்களை இக்குழுவின் தலைவராக நியமிக்கிறேன்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS